# பரீட்சையில் தவறிய பல்கலைக்கழக மாணவர்


Registered as a Newspaper in Ceylon ★ விலைசதம் 10

# ஈழநாடு

EELANADU

மலர் 10
இதழ் 135
தபால்பெட்டி எண். 49
போன் 389
National Tamil Daily
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஷேச ஆனி 13 ரபி அல் 29 புதன்கிழமை (26-6-68)


## அரசாங்கத்துக்கு ரூ. 24 லட்சம் செலவு

கொழும்பு, செவ்வாய்
பல்கலைக்கழக மாணவர் பலர் பரீட்சையில் தேறாததனால் அரசாங்கத்துக்கு இவ்வருடத்தில் மேலும் 24 லட்சம் ரூபாய் செலவு ஏற்படுமென்று தேசிய உயர் கல்விச்சபை கணக்கிட்டிருக்கிறது.

பல்கலைக்கழக விடுதியில் தங்கியிருந்து கல்வி பெறும் ஒரு மாணவருக்கு வருடத்துக்கு இரண்டாயிரம் ரூபாய் அரசாங்கம் செலவு செய்கிறது இம்முறை 40சதவிகித மாணவர்கள் பல்கலைக்கழகப் பரீட்சையில் தேறவில்லையாம். இவர்கள் மீண்டும் ஒரு வருடம் பல்கலைக்கழகத்திலிருக்க வேண்டும். இவர்களுக்காக அரசாங்கம் மேலும் 24 லட்சம் ரூபாய் செலவிட வேண்டியுள்ளதாம்.

# பல்கலைக்கழக மாணவர் தெரிவு: விசாரிக்க குழு நியமிக்கவும்

## கல்கிறன்ஓயா நான்கு சிறுவர்களை பலி எடுத்தது

கண்டி, செவ்,
நான்கு பள்ளிச் சிறுவர்களை கல்கிறன் ஓயா பலி எடுத்த கோர சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்றுள்ளது. பலியுண்டவர்களில் இருவர் அக்காவும், தங்கையும். இருவர் கண்டி ஆஸ்பத்திரியில் மாண்டனர்.

மாப்பகந்த வித்தியாலய மாணவர்கள் நாவலப்பிட்டியில் பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற மாணவர் கதம்ப நிகழ்ச்சியில் கலந்து கொண்டுவிட்டு இரவு வீடு திரும்பிக் கொண்டிருக்கையிலேயே இப்பரிதாபகரமான சம்பவம் நடைபெற்றது.

கல்கிறன் ஓயா பாலத்தை மாணவர்கள் கடந்த போது பாலம் உடைந்தது. 15அடி உயரமான நீருக்குள் விழுந்த மாணவர் சிலரில் இருவர் ஸ்தலத்திலேயே மாண்டனர். 17பேர் மயிரிழையில் தப்பினர்.

"இடமாற்றம், பதவி உயர்வு

## நிரந்தரத் திட்டங்களாக அமைய வேண்டும்"

### தமிழர் ஆசிரியர்சங்க அறிக்கை

யாழ்ப்பாணம், புதன்
"இடமாற்றம் பதவி உயர்ச்சித் திட்டங்கள் நிரந்தரத்திட்டங்களாக அமைய வேண்டும். காலத்துக்குக் காலம் அதிகாரிகள் மாறத் திட்டங்கள் மாறுவதோ செயற்படாமல் போவதோ தவிர்க்கப்பட வேண்டும்."

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்க பதினேழாவது வருடாந்த மகாநாட்டு அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் முதலாம் திகதி கொட்டாஞ்சேனை மத்திய மகா வித்தியாலயத்தில் இம் மகாநாடும் பொதுச்சபைக் கூட்டமும் நடைபெறும். உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

பொதுச் செயலாளர் தமது ஆண்டறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"பதவியுயர்வில் சேவை மூப்புக்கு முதலிடம் கொடுக்க வேண்டும் என்று ஆரம்பத்திலிருந்து வற்புறுத்தி வந்தோம். அதனைக் கல்விப் பகுதியினர் ஏற்றுப் பதவியுயர்வைச் சேவைமூப்பு அடிப்படையில் கொடுத்து வந்தனர். ஆனால் இவ்வாண்டு நடைபெற்ற பதவியுயர்ச்சியில் முதுமுறை முற்றாகப் புறக்கணிக்கப்பட்டது. இப்புறக் கணிப்பு ஊழல்களுக்கும் செல்வாக்குகட்கும் இடம் அளித்தது. 1-ம் தரத் தலைமையாசிரியர் பதவியுயர்வில், நீண்டகாலம் 2-ம் தரத் தலைமையாசிரியராகவும் சேவையின் உச்சியில் உள்ளவர்களாகவும், திறமையுடையவர்களாகவும் உள்ள பலர் முதலாவது நேர்முகப் பரீட்சையிலேயே மட்டம் தட்டப்பட்டனர். இதனைத் தீவிரமாக எதிர்த்தோம். கல்விமந்திரி, அதிகாரிகள், தமிழ்த் தலைவர்கள் ஆகியோருடன் தொடர்பு கொண்டோம். பத்திரிகைகள் மூலமும் கண்டனம் தெரிவித்தோம். நிரந்தரக் காரியதரிசி அவர்களைப் பேட்டி கண்டோம். தமிழ்த் தலைவர்களும் எமது எதிர்ப்பை நியாயமானது என ஏற்றனர். அதிகாரிகள் தவறை உணர்ந்தனர். முதலாம் நேர்முகப் பரீட்சையில் மட்டந்தட்டப்பட்ட ஆசிரியர்கள் இரும்பவும் நேர்முகப் பரீட்சைக்குக் கொழும்புக்கு அழைக்கப்

(6-ம் பக்கம் பார்க்க)

## தப்பபிப்பிராயம் நீக்க அமைச்சர் யோசனை

### "தமிழருக்கென பல்கலைக்கழகம் இருப்பது இப்போது அவசியம்"

தெல்லிப்பழை, செவ்.
'இலங்கையில் தமிழ் மக்கள் தமது கலை, கலாச்சார, பண்பாடு பாரம்பரியங்களைத் தொடர்ந்து பேணிப் பாதுகாக்க தமிழருக்கென பிரத்தியேக பல்கலைக்கழகம் நிறுவப்படவேண்டும்.'

இவ்வாறு உள்ளூராட்சி அமைச்சர் திரு. எம். திருச்செல்வம் தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

கல்லூரி அதிபர் திரு. ரி. ரி. ஜெயரத்தினப் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அமைச்சர் திரு. திருச்செல்வம் மேலும் பேசுகையில் கூறியதாவது:

தமிழ் பல்கலைக்கழகம்நிறுவப்படுவதாலேயே தமிழ் இனத்தவர் தமது மானத்தை இழக்காது பேணிக் காப்பாற்ற முடியும்.

**குழப்பமானநிலை**

இப்போது இந்நாட்டின் கல்வித்துறை பெரும் பிரச்சினைகள் நிறைந்து குழப்பமான நிலையிலிருக்கிறது இதற்குத் தீர்வுகண்டு நல்ல நிலையைஏற்படுத்துதல் தமிழ் மக்களினதும் பிரதான கடமையாகும்.

**விசாரணைக்குழு வேண்டும்**

இலங்கைப் பல்கலைக்கழகத்துக்கு நியாயமற்ற முறையில் பெருந் தொகையான தமிழ்மாணவர்கள் விஞ்ஞானத்துறைப்பீடத்துக்கு தெரிவு செய்யப்படுவதாக தற்போது புகார் எழுந்துள்ளது. இவ்வாறுள ஒரு பகுதியாரின் தவறான எண்ணம் ஆதாரமற்றது. எனவே பல்கலைக்கழக மாணவர் புகுமுக தெரிவு குறித்து ஆராயபாரபட்சமற்ற விசாரணைக் குழு நியமனம் செய்யப்பட வேண்டுமெனக் கருதுகின்றேன்.

**மாணவர் எதிர்காலம்**

பாடசாலைகளிலிருந்து வருடந்தோறும் உயர்தர கல்விகற்று பெருமளவில் மாணவர்கள் வெளியேறுகின்றனர். நூற்றுக் கணக்கான இவர்களுக்குஅரசாங்க உத்தியோகங்களை உடனடியாக வழங்கஅரசாங்கத்தினால் இயலாதிருக்கின்றது. எனவே மாணவர்கள் தமது எதிர்கால வாழ்க்கையை சீர்பெறஅமைத்துக்கொள்ள தொழில் நுட்பத் துறையில் மாணவர்களுக்கு போதனையளிக்க ஆசிரியர் பெற்றோர் ஆகியோர் ஏற்ற ஏற்பாடு செய்தல்வேண்டும். விவசாயத்துறையிலும் படித்த வாலிபர் கவனம் செலுத்த வேண்டும்.

**நம்பவேண்டாம்**

அமைச்சர்கள், எம். பிக்கள், அரசியல் தலைவர்கள் ஆகியோரை மாணவர் தமது தொழிலுக்காக நம்பிக்

(6-ம் பக்கம் பார்க்க)

## யார் மேயர்?

கொழும்பு, செவ்.
தெஹிவளை-கல்கிசை மாநகரசபையின் புதிய மேயரைத் தெரிவு செய்வதில் எதிர்க்கட்சிக்கூட்டு முன்னணியினர் ஈடுபட்டுள்ளனர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த திரு. எல். வி. குணரத்தினவும் மற்றொருவரும் மேயர் பதவிக்குப் போட்டியிட முன்வந்திருப்பதுடன் லங்கா சமசமாஜக் கட்சியைச்சேர்ந்த திரு. சந்திரா குணரத்தினவும் மேயர்பதவிக்குப் போட்டியிட முன்வந்துள்ளாராம். எனினும் யாரை மேயராக்குவதென்பதைத் தெரிவு செய்யும் இறுதிமுடிவு எதிர்க்கட்சிக் கூட்டணித் தலைவரான திருமதி சிறிமா பண்டாரநாயகாவிடம் விடப்பட்டுள்ளதாம்.

தொழில் நுட்பக்கல்லூரி வெளிமாணவர்

## பரீட்சைகளுக்கு விண்ணப்ப பணம் செலுத்த வேண்டும்

உடுவில், செவ்.
நாடெங்கிலுமுள்ள தொழில்நுட்ப நிலையங்களின் வெளிமாணாக்கர் வரிசையில் இரண்டாம் முறையாக இறுதிப் பரீட்சைகளுக்கு தோற்றும்பரீட்சார்த்திகளுக்கு புதிய நடைமுறைகள் எதிர்நோக்கியுள்ளன. இரண்டாந்தடவையாக வெளிமாணாக்கர் வரிசையில் இருந்து பரீட்சைஎழுதுபவர்கள் இனிமேல் தாம் எடுக்கும் போதனையினங்களுக்கு விண்ணப்பப்பணம் செலுத்தவேண்டும் என்றும் இப்புதிய நடவடிக்கை இந்த வருடம் முதலே அமுலாக்கப்படவேண்டுமென்றும் தொழில் நுட்ப இணைக்களப் பகுதியினர் சகல தொழில் நுட்பநிலைய அதிபர்களுக்கும் அறிவித்திருக்கின்றனர்.

தொழில்நுட்ப நிலையங்களில் பயிற்சிபெற்று உரிய காலங்களுக்கிடையே சித்தியடையத் தவறும் பரீட்சார்த்திகள் வெளிமாணாக்கராக இருந்து ஒரு முறை பரீட்சை எழுதலாம் என்றும் அம்முறையும் அவர்கள் சித்தியடையத் தவறினால் இரண்டாம்முறையாக விண்ணப்பப்பணம் செலுத்தியே

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பொதுவாக நமது பிரார்த்தனை தீவிர பக்தி உணர்ச்சியற்றுள்ளது. நாம் உண்மையாக மனப்பூர்வமாக நம்பிக்கையுடன் பிரார்த்தனை செய்தால், அவர் அருள் பெற்று, அது நிறைவேறுகிறது.

— சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

[illegible] National Tamil Daily
Telegram: [illegible]
Post Box 49 Jaffna
Telephone 389.

சாதிவரணக் கிலகவருஷம் ஆனி மாதம் 13-ந்திகதி
(26-6-68)


## மாநகரசபை தேர்தல் படிப்பினை

தெகிவளை - கல்கிசை மாநகரசபைத் தேர்தலில் எதிர்க்கட்சிக் கூட்டு முன்னணியினர் பெரும் வெற்றியீட்டியிருக்கின்றனர். 29 வட்டாரங்களைக் கொண்ட இச்சபையில் எதிர்க்கட்சிக்கூட்டு முன்னணியினர் 21 வட்டாரங்களில் வெற்றிபெற்றனர். இதுவரை மாநகர நிர்வாகத்தை வகித்து வந்த ஐக்கியதேசியக்கட்சியினர் எட்டுவட்டாரங்களில்தான் வெற்றிபெற்றிருக்கின்றனர். இது மாநகரசபைத் தேர்தலதான் என்றாலும் இன்றைய அரசியல் நிலையில் இது முக்கியத்துவம்வாய்ந்ததாகும்.

தெகிவளை - கல்கிசை மாநகரசபையின் வட்டாரங்கள் புதிதாகப் பிரிக்கப்பட்டபின் நடைபெற்ற முதலாவது தேர்தல் இது. ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சி, லங்காசமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகிய மூன்று முக்கிய எதிர்க்கட்சிகள் முன்னணி அமைத்து தங்களுக்குள் பொதுக்கொள்கைத்திட்டமொன்றை உருவாக்கி அதில் கைச்சாத்திட்ட பின்னர் நடைபெற்ற தேர்தலும் இதுவாகும். இலங்கையின் தலைநகரை அடுத்துள்ள புற நகரில் நாட்டின் ஆட்சிபீடத்திலமர்ந்துள்ள கட்சி தோல்வியடைந்திருக்கிறது. ஆளும் கட்சி தோல்வியடைந்திருப்பதற்கும் எதிர்க்கட்சி கூட்டணியினர் பெரும்வெற்றிபெற்றிருப்பதற்கும் காரணம்என்ன?

தெகிவளை - கல்கிசை மாநகரசபை அமைக்கப்பட்டதிலிருந்து இன்று வரை அந்தமாநகரசபையின் நிர்வாகம் ஐக்கிய தேசியக்கட்சியிடமே இருந்து வந்திருக்கிறது. மக்கள் எதிர்பார்த்த அளவுக்கு அந்த நகரம் வேகமாக விருத்தியடையாததும் ஒரே கட்சியினர் நீண்டகாலம் நிர்வாகப் பொறுப்பை ஏற்றிருந்ததால் மக்களுக்குஏற்பட்ட சலிப்பும், நிர்வாகத்தில் ஒரு மாறுதல் ஏற்பட வேண்டுமென்ற மனப்பான்மையையும் ஐக்கிய தேசியக்கட்சியினர்தோல்வியடைந்ததற்கும்எதிர்க்கட்சிக் கூட்டணியினர் வெற்றிபெற்றதற்கும் ஒரு காரணம் என்று சொல்லலாம். இவைதவிர இத்தேர்தல் பிரசாரத்தில் மாவட்ட சபை மசோதாவும் முக்கிய இடம்பெற்றிருந்தது. மாவட்டசபைகளுக்கெதிராக எதிர்க்கட்சிக் கூட்டணியினர் நாடு முழுவதிலும் தீவிரமாகப் பிரசாரம் செய்து வந்ததுடன் ஆளும்கட்சியான ஐக்கியதேசியக்கட்சியினர் கூட மாவட்டசபைபற்றி பகிரங்கமாக தங்களுக்குள் சர்ச்சை செய்து வந்தனர். ஆளும் கட்சியினர், தமது திட்டத்தைப்பற்றி தமக்குள் வேறுபட்ட அபிப்பிராயங்களை வெளிப்படையாகச் சர்ச்சை செய்துவந்ததும் ஐக்கியதேசியக் கட்சி பலவீனமடையக் காரணமாக இருந்தது. ஐக்கிய தேசியக்கட்சி தனித்துவத்தை இழக்கவில்லையானாலும் தேசிய அரசாங்கம் என்ற நிலையில்தான் மாவட்டசபை மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறது. மாவட்டசபை வேண்டுமென்று வலியுறுத்தி வருபவர்கள்தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் தமிழரசுக்கட்சியினரேயாம். தேர்தல் பிரசாரங்களில் மாவட்டசபைக்கு எதிரானபிரசாரத்துக்கு பதிலளிக்கும் திருதியமிழரசுக்கட்சியினருக்கே உண்டு. இந்தத் தேர்தல் பிரசாரத்திலும் தமிழரசுக்கட்சியினருக்கும் சந்தர்ப்பமளிக்கப்பட்டிருந்தால் மாவட்டசபைகள்பற்றிய தவறான பிரசாரத்தையும் அதனால் ஏற்படுத்தப்பட்ட தப்பபிப்பிராயங்களையும் நீக்க உதவியாக இருந்திருக்கும். தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியினர் தோல்வியடைந்தாலும் கூட, தவறான பிரசாரத்தையும் தப்பபிப்பிராயத்தையும் ஓரளவாவது நீக்க முனைந்தார்கள் என்ற திருப்தியையும் தேசிய ஐக்கியம் தேர்தல்பிரச்னையல்லவென்பதையும் உணர்த்தியிருக்கலாம்.

இவைகளையெல்லாம் விட இந்த மாநகரசபைத் தேர்தலிலும் சரி இதற்கு முன்நடைபெற்ற உப தேர்தல்களிலும் சரி யு. என். பி. தோல்வி கண்டதற்கு முக்கியகாரணம் விலைவாசி உயர்வும் அத்தியாவசியப் பொருள் தட்டுப்பாடும் வேலையில்லாத் திண்டாட்டப் பிரச்னை அதிகரித்து வந்திருப்பதுமேயாகும். அடுத்த பொதுத்தேர்தல் காலம் நெருங்கிவரும்சமயத்தில் இத்தோல்விகள் ஆளும் கட்சியினருக்கு எச்சரிக்கையாக இருக்கவேண்டும். முதல்வேலை விலைவாசி உயர்வைக் குறைப்பது என்பதை ஆளும் கட்சியினர் உணரவேண்டும்.

சென்னையில்

### தொடர்ந்து தீ விபத்துக்கள் 500 பேர் வீடிழந்தனர்

சென்னை, ஜூன், 25

சென்னைச் சேரிப் பகுதிகளில் நேற்று 7 சிறிய தீவிபத்துக்கள் ஏற்பட்டன. இவற்றின் விளைவாக 500 பேர் வீடிழந்தனர்.

நேற்றுமாலை, தென்சென்னையில் நடந்த ஒரு தீவிபத்தில் 80 குடிசைகள் எரிந்தன. மற்ற 6 தீவிபத்துக்களில், 15 குடிசைகள் தீக்கிரையாயின.

### இன்று

யாழ்ப்பாணம், புதன் சித்தங்கேணி சிவன்கோவிலில் இன்று அலங்கார உற்சவத்தை முன்னிட்டு பகல் விஷேட அபிஷேகமும் மாலை பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியத்தின் 'எல்லாம் அவன் [illegible]'' என்னும் பொருள் பற்றிய கதாப்பிரசங்கமும் நடைபெறும்.

## பத்திரிகை சபையும் பத்திரிகை சுதந்திரமும்

[இந்தியாவின் முன்னாள் தகவல் ஒலிபரப்பு மந்திரியும் தற்போது பத்திரிகாசிரியருமான ஸ்ரீ. ஆர். ஆர். திவாகர் பத்திரிகை சுதந்திரத்தை எதிர்நோக்கும் ஆபத்துகளைப்பற்றி இக்கட்டுரையில் ஆராய்கிறார்.]

இந்தியாவில் பத்திரிகை சபை ஏற்பட்டிருக்கும் இச்சமயத்தில் பத்திரிகைகளின் சுதந்திரத்தைப் பாதுகாப்பது சம்பந்தமாக சில முக்கியமான விஷயங்களை ஆராயலாம் என்று நினைக்கிறேன்.

மத்திய அரசாங்கம், ராஜ்ய அரசாங்கங்கள் உட்பட எல்லா ஜனநாயகஸ்தாபனங்களினதும் வேலைகளைப் பற்றி பொதுஜன அபிப்பிராயத்தை சீரான வழியில் திருப்புவதற்கு பத்திரிகைகள் சுதந்திரமாகவும் தைரியத்தோடும் இருக்க வேண்டுமென்பதை சொல்ல வேண்டியதில்லை.

பத்திரிகைகளின் சுதந்திரத்தையும் துணிச்சலையும் பத்திரிகைசபை எப்படிக் காப்பாற்றப் போகிறது?

இப்போதுள்ள அமைப்பில் பத்திரிகை சுதந்திரத்தைக் காப்பாற்றவோ பத்திரிகைகளுக்கு ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தடுப்பதற்கோ பத்திரிகை சபைக்கு அதிகாரம் கிடையாதென்பதை வருத்தத்துடன் தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

பொருளாதார காரணங்களுக்காக அரசாங்கங்கள் பத்திரிகைகள்மீது பலவகை கட்டுப்பாடுகளைத் திணிக்க முடியுமென்பது உண்மைதான். அச்சுத்தாள் விநியோகம், அந்நிய செலாவணி, விளம்பரம் கொடுத்தல், மின்சார விநியோகம், லைசென்ஸ் வழங்குதல் முதலிய விஷயங்களில் அரசாங்கங்கள் பாரபட்சம் காட்டுவதற்கு இடமுண்டு.

ஆகையால் இத்தகைய அதிகாரங்களைப் பிரயோகிக்கும்போது நிர்வாகத்தில் ஒரு கண் வைத்திருக்கக் கூடியதாக பல கட்சிகளுமடங்கிய ஆலோசனைசபைகளை ஒவ்வொரு அரசாங்கமும் நிறுவுதல் வேண்டும். பத்திரிகை சபையைப் பொறுத்தவரையில் இவ்விஷயங்கள் சம்பந்தமாகக் கிடைக்கும் குற்றச்சாட்டுகளை ஆராய்ந்து அபிப்பிராயம் தெரிவிக்கும் உரிமை அதற்கு இருக்க வேண்டும்.

நிர்வாக அதிகாரிகளின் பயமுறுத்தல், பாரபட்சம், அதிகார துர்ப்பிரயோகம் முதலியவை போக வேறு சில ஆபத்துகளும் ஏற்படலாம். சிவசேனை, ஆர்ப்பாட்டம் செய்யும் மாணவர் கமிட்டி முதலியவையும் நெருக்குவாரம் தரக்கூடும். பணம், பதவி படைத்தவர்கள் லஞ்சம் கொடுத்து பயமுறுத்துவார்கள். மானியம் அளிப்பது, விளம்பரம் கொடுப்பது போன்ற விஷயங்களில் அந்நிய நாடுகளும் தலையிடலாம்.

இதுபோன்ற விஷயங்களை ஆராய்ந்து தீர்ப்புக் கூறும் அதிகாரம் பத்திரிகை சபைக்கு இருக்க வேண்டுமல்லவா? நாட்டின் சாதாரண சட்டங்கள் இருந்தபோதிலும் மேற்கூறிய விஷயங்கள் அவற்றுள் அடங்கமாட்டா.

பத்திரிகைசபை ஒன்றுதான் பத்திரிகா சுதந்திரத்தைக் காப்பாற்ற முடியும். குற்றச்சாட்டுகளை விசாரித்துத் தீர்ப்பளிக்கும் உரிமை அதற்கு இருக்க வேண்டும்.

ஆசிரியருக்குக் கடிதம்

## பஞ்சமர்கள் கோயிலுள் செல்ல உரிமை வழங்குகிறது

1957-ம் ஆண்டில் நிறுவப்பட்ட சமூகக்குறைபாடுகள் தடுப்புச்சட்டம் நடைமுறையிலிருந்தாலும் இச்சட்டம் இந்து ஆலயங்களுக்குப்பிரவேசிக்கும் பஞ்சமர்களைத் தடுப்பதற்கு தர்மகர்த்தாக்களுக்கும் முகாமையாளருக்கும் அதிகாரம் உண்டு எனச் சிலர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். தர்மசாதனச் சட்டத்தின் கீழ் கோயில் மனேஜர்மாருக்கும் தர்மகர்த்தாக்களுக்கும் கோயிற் சொத்துக்கள் உடமைகள் என்றும் கோயிலே ஒரு சொத்தாகையினாலே அக்கோயிலினுட் பிரவேசிப்பவர் யாரையாகுதல் தடுப்பதற்கு அவர்களுக்கு உரிமையுண்டென்றும் அவர்கள் கூறுகின்றனர்.

தர்மசாதனச் சட்டத்தின்படி தர்மகர்த்தாக்களின் சொத்துரிமை பூரணத்துவமானதன்று. அந்த உரிமை அவர்களிடம் பெயரளவில் இருக்க அந்தச் சொத்துக்கள் எவர்களுடைய நயத்திற்காக விடப்பட்டனவோ அவர்களுடைய பிரயோசனத்துக்குச்சொத்துகள் அமைந்துள்ளன. இவ்விதம் இச்சட்டத்தின் 3-ம் ஷரத்து கூறுகிறது.

தர்மசாதனச்சட்டம் பொதுமக்களுக்கோ அல்லது ஒரு பகுதியினருக்கோ சமயவழிபாடுக்கு தர்மசாதனம் பண்ணுவதற்கு வழிவகுத்துள்ளது, ஆனால் இச்சட்டம் சமூக குறைபாடுகளை நீக்குவதற்கு வழிவகுக்கவில்லை இந்தக் குறைபாடுகளை நீக்குவதற்கு [illegible] குறைபாடுகளை நீக்குவதற்கு வேறொரு சட்டம் உண்டு பண்ணவேண்டியதாயிருந்தது. எனவே 1957 ல் சமூக குறைபாடுகள் தடுப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டத்தின் முகவுரை பின்வருமாறு கூறுகிறது.

''சாதியடிப்படையில் மனிதர்கள் மீது சமூகக் குறைபாடுகளை விதிப்பதை தடுப்பதற்கே இச்சட்டம் அமைந்துள்ளது''.

இக் கூற்றிலிருந்து இச்சட்டத்தின் முக்கிய நோக்கம் விளங்குகிறது

இச்சட்டம் 1957ல் அமுலுக்குக்கொண்டுவருவதற்கு முன்பு ஆலயப்பிரவேச உரிமை பஞ்சமர்களுக்கு இருந்தாலும்சரி இல்லாவிட்டாலும் சரி இச்சட்டம் சமூகக் குறைபாடுகளை இத்தேசத்தில் எக்காலத்திலும் அகற்றும் அதிகாரமே 2-ம் மூன்றும் ஷரத்துகளினால் அளிக்கப்பட்டுள்ளது. இச்சட்டம் அமுலுக்கு வருமுன்பு, இந்தபஞ்சமர்களின் ஆலயப்பிரவேச உரிமையைத்தான் பாதுகாக்கிறதென்பது இச்சட்டத்தின் நோக்குக்கு மாறானதாகும். பஞ்சமர்களின் பிரவேச உரிமையை எக்காலத்தும் பேணிக்கொடுக்கிறது இச்சட்டம்.

நாகபூஷணி அம்மன் கோயில் வழக்கில் தீர்த்தபடி வழமை ஒரு சமூகத்தினராலோ அல்லது ஒரு பகுதியினராலே சாதிக்கப்பட்டிருக்கவேண்டும் இந்த வழக்கின்படி பூசை உரிமையை குறித்த பூசாரிமார் சந்ததிசந்ததியாக நாடோறும் சாதித்துக் கையாண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இந்த ஆலயங்களினுள் பஞ்சமர்கள் விடப்படவில்லை

(6ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

சாவகச்சேரியில் திருவள்ளுவர் விழாவில் கலந்து கொள்வதற்காகச் செல்லுகையில் வழியிலே ஓர் ஊர்வலத்தைக் கண்டேன். ஏதோ சிங்களத்தில் பைலா பாட்டை ஒலிபெருக்கி முழங்கியது. சிலர் பெரிய சுகாதார பிரசார படங்களடங்கிய அட்டைகளை எடுத்துக்கொண்டுவந்தனர்.

ஊர்வலத்தின் கடைசியிலே ஒரு வண்டியிலே, 'முருகன் கள்ளுக்கொட்டில்' என்று விளம்பர அட்டை தொங்கியது. கள்ளுக்கொட்டில் மாதிரி வைத்து, அதில் இரண்டொருவர் மடலில் கள்ளு பருகுவது போன்ற காட்சியைக் கண்டேன். மதுபானத்துக்கு விளம்பரமோ, என்று தோன்றியது.

பின்னர் விசாரித்ததில் ஒரு ஜனசமூக நிலைய ஆண்டு விழாவில் விநோத உடைப்போட்டிக்கான ஊர்வலமென்று தெரிந்தது.

ஃ ஃ ஃ

தென்னிலங்கையில் மரவரி முறையை சென்ற அரசாங்கம் கொண்டுவர முயன்றதும், அதற்குப் பலத்த எதிர்ப்பு கிளம்பி அதை முறியடித்தனர். காரணம் மரவரி முறையால் குடிபெருகி மக்களுக்குத் தீமையேற்படும் என்பதுதான். ஆனால் இவ்விஷயத்தில் தெற்குக்கு ஒரு சட்டம் வடக்குக்கு வேறு. இங்கு மதுபானம் பெருகி மக்கள் எப்படிக்கெட்டுப்போனாலும் யாருக்கு என்ன கவலை?

இங்குள்ள நமது எம். பி. மார்களோ, இதைப்பற்றி வாய் திறந்து பேசவும் துணியமாட்டார்கள். குடியால் பல குடும்பங்கள் குட்டிச் சுவராகின்றன, குற்றங்கள் அதிகரிக்கின்றன. மதுபானமே இதற்குப் பெரிதும் காரணமென்று தெரிந்தும், நமது தலைவர்கள் ஏன் இதைப் பற்றி ஒன்றும் பேசாமலிருக்கின்றனர்?

கொழும்பு- யாழ்ப்பாணம் ரயிலில் மதுவிற்பனையை நிறுத்தப்போவதாக மந்திரி திருநாயக்கா அறிவித்தார். இதற்காக அவசரப்பட்டு அவரைப் பாராட்டியும் விட்டோம். ஆனால் ரயிலில் அந்த விற்பனை நிற்கவில்லை. வடபகுதி மக்கள் குடித்து குட்டிச் சுவராகப் போகட்டுமென்ற நோக்கமா? நமது எம். பி. மார்கள் இவ்விஷயமாக ஏதும் முயற்சி எடுத்தனரா? இனியாவது எடுப்பார்களா?

ஃ ஃ ஃ

ஊர்காவற்றுறை பருத்தி அடைப்பு கிராமத்திலே சிதிர்வேலாயுத சுவாமி கோவில் திருப்பணிக்காக, புகழ்பெற்ற வைரமுத்து கோஷ்டியினர் 'பூதத்தம்பி' நாடகம் நடித்தனர். நல்ல கூட்டம். இது ஒரு சரித்திர நாடகம். நாடகத்துக்குமுன் வைரமுத்துவுடன் சற்று பேசிக்கொண்டிருந்தேன். பிறகு மேடையிலே அந்திராசியாராக வேடம் தரித்து வந்தபோது சற்றும் அடையாளமே தெரியவில்லை. 'டிப்டாப்பாக' உடைதரித்து, கையில் ஒருசின்னப் பிரம்பைவைத்துக் கொண்டு சுழற்றிக்கொண்டே மைனர் போன்று நடித்தது முதல் நம்பர். பூதத்தம்பியாக நடித்தவரின் சாரீரம் எஸ். ஜி. கிட்டப்பாவை நினைப்பூட்டியது. அழகவல்லியாக வந்தது, அசல் பெண்ணேதான் என்று நினைக்கும்படி இருந்தது.

சிலகாட்சிகள் தான்பார்த்தேன் விட்டுவரவே மனமில்லை. சிறந்த பிறவி நடிக

[6-ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்ஸின் 2-வது சுற்றுத் தேர்தல்களில் இடதுசாரிகள் கம்யூனிஸ்டுகள் கூட்டணி

## மத்திய கட்சி ஆதரவைப் பிரதமர் பொம்பாடு கோருகிறார்

பாரிஸ், ஜூன் 25

பிரான்ஸில் நடைபெற்ற முதலாவது சுற்றுத் தேர்தல்களில், ஜனாதிபதி டி கோல் கட்சியினருக்குக் கிடைத்த வெற்றியைத் தொடர்ந்து, கம்யூனிஸ்ட் கட்சியும், இடதுசாரிக் கட்சிகள் சம்மேளனமும் அடுத்த ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கும் இரண்டாவது சுற்றுத் தேர்தல்களில் ஒத்துழைப்பதெனத் தீர்மானித்துள்ளன.

ஐக்கிய சோஷலிஸ்ட் கட்சியும், இக்கட்சிகளுக்குத் தனது ஒத்துழைப்பை அளிக்கச் சம்மதித்துள்ளது. கம்யூனிஸ்ட் கட்சிக்கு அல்லது இடதுசாரிக் கட்சிகள் சம்மேளனத்துக்கு, வெற்றி பெறும் சந்தர்ப்பம் எவ்வெத் தொகுதிகளில் அதிகமாகக் காணப்படுகிறதோ, அவற்றில் தனது அபேட்சகர்களை நிறுத்துவதில்லை என்று ஐக்கிய சோஷலிஸ்ட் கட்சி தீர்மானித்துள்ளது.

இதற்கிடையில் இரண்டாவது சுற்றுத் தேர்தல்களில் டி கோல் கட்சிக்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு மத்திய கட்சியையும் இதர கட்சிகளையும் பிரெஞ்சுப் பிரதமர் திரு. பொம்பாடு கேட்டுக் கொண்டுள்ளார்.

மத்திய கட்சியோ அல்லது வேறுகட்சியோ எந்தத் தொகுதியில் வெற்றி பெறும் சந்தர்ப்பத்தை அதிகமாகப் பெற்றுள்ளதோ, அந்தத் தொகுதியில் தமது கட்சி அபேட்சகர்களை நிறுத்தாது என்று திரு. பொம்பாடு உறுதியளித்துள்ளார்.


அமெரிக்காவில்

## ஒவ்வொரு துப்பாக்கிக்கும் லைசென்ஸ் வேண்டும்

### சட்டம் கொண்டுவர ஜோன்ஸன் திட்டம்

வாஷிங்டன், ஜூன் 25

அமெரிக்காவில் உள்ள ஒவ்வொரு துப்பாக்கியும் பதிவு செய்யப்பட்டு அதற்கான லைசென்சும் எடுக்கப்பட வேண்டுமெனக் கோரும் சட்டமொன்றைத் தாம் விரைவில் கொண்டுவர விருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்ஸன் அமெரிக்க காங்கிரஸ்சபைக்குத் தெரிவித்துள்ளார்.



இச்சட்டத்தின்மூலம் துப்பாக்கித் துர்ப்பிரயோகத்திலிருந்து அமெரிக்க மக்களைப் பாதுகாக்கும் தருணம்வந்துவிட்டதாகத் திரு. ஜோன்ஸன், காங்கிரசுக்கு அனுப்பிய செய்தியொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

செனேட்டர் றொபேட் கென்னடி கொலையைத் தொடர்ந்து துப்பாக்கிகள் மீது கடுமையான கட்டுப்பாட்டுவிதிகள் விதிக்கப்பட வேண்டுமென அமெரிக்காவில் பலத்த பொது அபிப்பிராயம் வலுவடைந்துள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது.

## போர் உடன்படிக்கையில் வடவியட்னும் கைச்சாத்திடாது

### முதலில் குண்டுவீச்சு நிறுத்தப்பட வேண்டும்

பாரிஸ், ஜூன் 25

வியட்னும் போர்நிறுத்த உடன்படிக்கையொன்றில் வடவியட்னும் கைச்சாத்திடலாமென்று அமெரிக்க உப ஜனாதிபதி திரு. ஹம்ப்ரி அண்மையில் தெரிவித்த ஆலோசனையை வடவியட்னும் நிராகரித்துள்ளது.

வடவியட்னும் மீதான குண்டுவீச்சையும், மற்றெல்லாப் போர் நடவடிக்கைகளையும் அமெரிக்கா நிறுத்திக் கொள்ளாதவரை இத்தகைய உடன்படிக்கையில் வடவியட்னும் கைச்சாத்திட முடியாதென்று பாரிஸ்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டுள்ள வடவியட்னும் பிரதிநிதிகள் கோஷ்டியின் உபதலைவர் திரு. லியான் தியூ, அமெரிக்க, பிரிட்டிஷ் பத்திரிகையாளரிடையே பேசுகையில் தெரிவித்தார்.

### அமெரிக்கா மறுப்பு

ஆனால், குண்டுவீச்சை நிறுத்த வேண்டுமென்ற வடவியட்னும் ஆலோசனையை, வாஷிங்டனிலுள்ள அமெரிக்க ராஜாங்க இலாகா, 'முடியாத காரியம்' எனமறுத்து விட்டது.

### அருளப்பர் திருநாள்

பண்டத்தரிப்பு, செவ்.

பெரியவிளான் புனித ஸ்நாபக அருளப்பர் வருடாந்த உற்சவம் ... நடைபெற்ற ... பாடற் பூசையுடன் முடிவடைந்தது.

## நைஜீரியாவில் போர்நிறுத்தம்

### பிரிட்டிஷ் முயற்சி

லண்டன், ஜூன் 25

சமஷ்டி நைஜீரியாவுக்கு ஆயுதங்கள் வழங்குவதைப் பிரிட்டன் நிறுத்தக் கூடுமென பிரிட்டிஷ் மந்திரி செப்பேட்பிரபு தெரிவித்துள்ளார்.

நைஜீரிய உள்நாட்டுப் போரில் ஏற்படும் இரத்தக் களரிக்கு மக்களிடையே இருந்துவரும் பலத்த எதிர்ப்பே, பிரிட்டிஷ் அரசாங்கத்தின் இக்கொள்கை மாற்றத்துக்கு முக்கிய காரணமாக விளங்குவதாகவும் செப்பேட் பிரபு கூறியுள்ளார்.

நைஜீரியாவில் போரிடும் சமஷ்டி நைஜீரிய, கிழக்கு நைஜீரியாவான 'பியாவ்ரா' துருப்புகளுக்கிடையேயான உள்நாட்டுப்போரை, விரைவில் நிறுத்திவைக்க பிரிட்டிஷ் அரசாங்கம் முயலுமென செப்பேட் பிரபு மேலும் தெரிவித்துள்ளார்.

### கவான் கருத்து

சமஷ்டி நைஜீரியத் தலைவரான ஜெனரல் கவான், பிரிவினை 'பியாவ்ரா', தனது பிரிவினையைக் கைவிட்டால்தான் சமஷ்டி நைஜீரியா, போர்நிறுத்தத்துக்கு உடன்படும் என்று மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

### காஸாப் பகுதியில் 10 பேருக்குச் சிறை

கெயிரோ, ஜூன் 25

இஸ்ரேல் பிடித்துள்ள காஸாப்பகுதியைச் சேர்ந்த 10 அரபுப் பிரஜைகளுக்கு ஒருவருடம் தொடக்கம் 18 வருடம்வரை, இஸ்ரேல் நிர்வாகம் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

அரபு தேசிய விடுதலைப் படையினருக்கு ஆயுதங்கள் அளித்த குற்றச்சாட்டிலேயே, இவர்களுக்கு இச்சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.

கி பாகிஸ்தானில்

## சீனு நிறுவி வரும் படைச்சாதனத் தொழிற்சாலை

ராவல்பிண்டி, ஜூன் 25

கிழக்குப்பாகிஸ்தானில் சீனு படைச் சாதனத் தொழிற்சாலை ஒன்றை நிறுவி வருகிறது. இத்தகவலைப் பாகிஸ்தான் பாதுகாப்பு மந்திரி உதவி அட்மிரல் திரு. ஏ. ஆர். கான், நேற்றுப் பாகிஸ்தான் சட்ட சபையில் தெரிவித்தார்.

கிழக்குப்பாகிஸ்தான் பாதுகாப்பில் தன்னிறைவு பெறுவதற்கான நோக்கத்துடன், பாகிஸ்தான் வேண்டுகோளின்படி, இப்படைச்சாதனத் தொழிற்சாலையைச் சீனு கட்டி வருவதாக அவர் கூறினார்.

இத்தொழிற்சாலை, திட்டமிடப்பட்டபடி உற்பத்தியைத் தொடக்குவதைப் பாகிஸ்தான் உறுதிப்படுத்தும் என்றார் அவர்.

தொழிற்சாலை பற்றி வேறு விபரங்களை அளிக்க அவர் மறுத்துவிட்டார்.

## சுவிட்ஸர்லாந்தில் இரண்டு ரயில்கள் மோதி 13 பேர்பலி

பேண், ஜூன் 25

சுவிட்ஸர்லாந்தில், எதிர் எதிராக வந்த இரண்டு ரயில்கள் மோதிக்கொண்டதன் விளைவாக, 13 பேர் உயிரிழந்தனர்; 119 பேர் காயமுற்றனர். இவர்களில் 17 பேருக்குப் படுகாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த இரு ரயில்களும் மணிக்கு 100 மைல் வேகத்தில் சென்று கொண்டிருந்தன.

## அஸ்ஸாம் வெள்ளத்தில் 12 பேர் மூழ்கி மரணம்

### வேறு சிலரைக் காணவில்லை

ஷில்லொங், ஜூன் 25

அஸ்ஸாமில், வெள்ளப் பெருக்கெடுத்த பிரமபுத்திர ஆற்றுப்பகுதியில் 12 பேர் நீரில் மூழ்கி மரணமாகினர் மற்றும் சிலரைக் காணவில்லை.

நேற்றுப் பிரமபுத்திர ஆறும், அதன் கிளைகளும் சீறிப்பாய்வதும் தணிந்து செல்வதுமாக இருந்தன. கவ்ஹாத்தியில், பிரமபுத்திர ஆறு, அபாய அளவுக்கு 2 அடி அதிகமான மட்டத்தை அடைந்தது.

தானியப் பயிர்களுக்கும், கால்நடைகளுக்கும் வெள்ளம் பெருத்த சேதத்தை விளைத்துள்ளது.

ராஜ்ய மந்திரிகள், வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குவிஜயம் செய்து நேரில் பார்வையிட்டனர்.

வெள்ளத்தினுல் அதிக சேதமடைந்த பகுதிகளில் நிவாரணமளிக்குமுகமாக அஸ்ஸாம் அரசாங்கம் ஏற்கனவே 1 1/2 லட்சம் ரூபாய் அளித்துள்ளது.

அகில இந்திய

### பத்திரிகையாளர் தேசியசபை மாநாடு

பங்களூர், ஜூன் 25

பங்களூரில் கூடிய அகில இந்திய பத்திரிகையாளர் தேசியசபை, தனது இரண்டுநாள் கூட்டத்தைமுடித்துக்கொண்டுள்ளது.

ஊழியர்சபைச் சிபார்சுகளின்படி ஊதிய உயர்வு அமுல் நடத்தப்படுவதற்கான இரண்டாவது சுற்றுப்போராட்டத்திற்கு, மற்றும் பத்திரிகையாளரல்லாதவர்களுடன் சேர்ந்து தயாராகும்படி உழைப்புப் பத்திரிகையாளரை வற்புறுத்தும் தீர்மானமொன்றைச் சபை நிறைவேற்றியுள்ளது.

### உ. பி. யில் கடும் மழை

லக்னோ, ஜூன் 25

உத்தரப் பிரதேசத்தில், கடும் மழை பெய்ததைத் தொடர்ந்துஏற்பட்ட வெள்ளத்தில், 5 பேர் உயிரிழந்தனர்.

போக்குவரத்துத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன. பயிர்களுக்கும் அதிக சேதம் ஏற்பட்டுள்ளது.

## வாஷிங்டனில் ஊரடங்குச் சட்டம்

### ஏழை மக்கள் இயக்கத் தலைவர் அபெநர்தி கைது

வாஷிங்டன், ஜூன் 25

அமெரிக்கத் தலைநகரான வாஷிங்டனில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. அமெரிக்க ஏழை மக்கள் இயக்கத்தின் தலைவரான டாக்டர் அபெநர்தியை பொலிசார் கைதுசெய்ததைத் தொடர்ந்து ஏற்பட்ட பலாத்கார மோதல்களே, ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படுவதற்கு காரணமாகும்.

கடந்த வாரம் ஆரம்பிக்கப்பட்ட ஏழைமக்களின் இயக்கம், பின்னர் சட்ட மறுப்பு இயக்கமாக மாறியது வாசகர்கள் அறிந்ததே.

இவ்வியக்கத்தைச்சேர்ந்த ஆயிரக்கணக்கான ஆர்ப்பாட்டக்காரர், நேற்று வாஷிங்டனை நோக்கிப்படையெடுத்தபோது, பொலிசார் இயக்கத் தலைவர் டாக்டர் அபெர்நதியையும் அவரைப் பின்தொடர்ந்து வந்த 200 சிஷ்யர்களையும் கைது செய்தனர். தம்மை ஏற்ற வந்திருந்த பொலிஸ் வானுக்குள் டாக்டர் அபெர்நதியும் அவரது சிஷ்யர்களும் மௌனமாக வரிசையில் ஏறிச் சென்று அமர்ந்தனர்.

ஆனால் அவர்கள் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டக்காரர் அமைதியிழந்தனர். கடைப் பலகணிகளை அடித்துநொருக்கினர் பொலிசார்மீதும் கற்கள் வீசினர். ஆர்ப்பாட்டக்காரரைக் கலைக்கப் பொலிசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் செய்தனர்.

மற்றுமொரு இடத்தில் இதே இயக்கத்தைச் சேர்ந்த100 ஆர்ப்பாட்டக்காரர் முன்னேறிச்செல்ல மறுத்தபோது, பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### புதன் 26-6-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

**344 மீற்றர் அல் 61 மீற்றர்**

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-45 நிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீற்றர் அல் 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர் கேட்டவை.

**344 மீற்றர் அல் 61 மீற்றர்**

மாலை 5-00 கல்விச் சேவை, 5-15 பிறந்தஇன மாழ்நிதங்கள், 5-30 ஞானமஞ்சரி.

இரவு 6-15 புல்லாங்குழல் — எஸ். செல்வநாயகம், 6-45 பாவளம், 7-00 இராமசஞ்சிகை, 7-30 நேயர் கடிதங்கள், 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பல்கலைக்கழக மாணவருக்கான விரிவுரை, 9-45 கலைக்கோலம், 10-15 தேர்ந்தஇசை.

## இன்றைய பலன்

[26 - 6 - 68]

ஆனி மீ 13 உ

புதன்கிழமை

திதி-பிரதமை, பி இ. 5-39வரை மேல் சதிவை.

நட்சத்திரம்- திருவாதிரை, இரவு 10-06வரை மேல் புனர்பூசம்.

ராகுகாலம் - 11-55 1-25.

சுபநேரம்- 4-25— 5-55.

இன்று பிறந்தவர்களுக்கு— இவ்வாண்டு நல்லாண்டாகும். தொழில்நலன், குடும்பஸ்தர்கள் வாழ்வில் குதூகலம், கைத்தொழில் விருத்தி, கலைஞர்கள் போற்றப்படுவர். கன்னியர் வாழ்வில் செழிப்பு மிகுதி, பெரியோர் உதவியும், பிறர்பொருள் வரவும் வாகனமுடையோர்க்கு வளமான ஆண்டாகும்.

மேஷம்- மக்கள் நலன், மனதிற்கிம் அமைதி.

ரிஷபம்- சிந்தனைக் குழப்பம், சிறிய தலையிடி.

மிதுனம்- இன்னவிய பின்னக் இதயபாரம்.

கடகம்- பேச்சுவன்மை பெரும் புகழ் உண்டு.

சிம்மம்- இரும்பு மனம் இருண்ட வாழ்வு.

கன்னி- மாதுருவழி மகிழ்ச்சி, மாண்புடன் வாழ்தல்.

துலாம்- புத்திரசுகம் பாக்கியவிருத்தி.

விருச்சிகம்- பகைமூட்டம் பார்த்துநட.

தனுசு- குடும்பத்தில் கொண்டாட்டம், குன்றென நிமிர்ந்து நிழ்.

மகரம்- சிநேகிதபகை செய்தொழில் தாமதம்.

கும்பம்- பெற்றோர் சுகம் பெருமதிப்புண்டு.

மீனம்- தொழில்நலன், தெய்வத்தின் துணை.

— சோதிடக் கலாநிதி —

இருமலை வேலுப்பிள்ளை

## காலணி விவகாரம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கப் பொதுச் செயலாளர் திரு. எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை பின்வருமாறு எழுதுகிறார்.

இம்மாதம் 8-ந் திகதி வெளிவந்த 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த ஒரு விளையாட்டுச் செய்தியில் யாழ்ப்பாணம் உதைபந்தாட்டச் சங்கம் பற்றிக் கூறப்பட்டிருந்தவை உண்மையல்ல.

எமது சங்கம் பாரபட்சமான முறையில் காலணிகளை விநியோகிக்கவில்லை. சென்ற வருடம், காலணிகள், மற்றும் விளையாட்டு உபகரணங்கள் தேவையென விண்ணப்பித்த கழகங்களுக்கு இலங்கை உதைபந்தாட்டச் சங்கத்திடமிருந்து எமக்கு கிடைத்தவற்றைக்கொண்டு பாரபட்சம் காட்டாது நியாயமான முறையில் விநியோகம் செய்யப்பட்டது. இவ்விநியோக விபரம் மாஜி செயலாளர்களால் சகல கழகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. அவ்வசறே, காலணிகள் மற்றும் உபகரணங்கள் கோரும் கழகங்கட்கு திறம்பட இவ்வருடமும் விநியோகம்செய்யப்பட்டு அவற்றின் விபரம் சகல கழகங்களுக்கும் விரைவில் அனுப்பிவைக்கப்படும். இவ் விநியோகம் பற்றிய அதிருப்தியையோ குறைகளையோ எமக்கு எக்கழகமும் இதுவரை அறிவிக்கவில்லை. பூட்சும் மற்றும் உபகரணங்களும் விநியோகிக்கப்பட்ட பட்டியல் எம்மிடம் உண்டு.

16 கழகங்கள் இச் சங்கத்திலிருந்து வெளியேறியதாகக்கூறப்படுவது உண்மையல்ல.

## லண்டனில் நியமனம்

உடுவில், செவ்,

லண்டனில் உள்ள சதாம்ரன் சர்வகலாசாலையின் மின்பொறி இயல் இணைக்களத்தில் மின்பொறி இயல் ஆராய்ச்சி உதவியாளராக கலாநிதி ஸ்ரீ ஹரன் நியமனம்பெற்றுள்ளார்.

கொழும்பு — புறக்கோட்டை தபால்நிலைய அதிபர் திரு. சிவசம்புவின் இரண்டாவது மகனுகிய ஸ்ரீ ஹரன் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் பழைய மாணவராவார்.

## தாயையும் குழந்தையையும் காணவில்லையாம்

உடுவில், செவ்.

இரவு படுக்கைக்குச் சென்றதாயையும் அவரது நான்கு மாதக் குழந்தையையும் காணவில்லையென ஆனைக்கோட்டை பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாயைச் சேர்ந்த சகுந்தலாதேவி என்பவரும் அவரது குழந்தையுஞ்சம்பவதினத்தன்று இரவு படுக்கைக்குச் சென்றதாகவும் மறுநாட் காலை அவர்களைக் காணவில்லை என்றும் காணமல் சென்றவரின் மைத்துனரான திரு. துரைராசா பொலிசில் புகார் செய்துள்ளார்.

## பண்டத்தரிப்பில் திருட்டு

சுழிபுரம், செவ்

பண்டத்தரிப்பு கிராமத்தைச் சேர்ந்த ஒரு விவசாயியிடமிருந்து சுமார் ஐநூறுக்கு மேற்பட்ட மிளகாய் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'எல்லோரும் கோவிலுள் செல்லும் நாள் விரைவில் வரும்'

## யாழ். அரசாங்கஅதிபர்தெரிவிக்கும்நம்பிக்கை

யாழ்ப்பாணம், புதன்

'யாழ்ப்பாண குடாநாட்டில் எல்லோரும் கோவிலுக்குள் அனுமதிக்கப்படும் நாள் விரைவில் வரும்'.

இவ்வாறு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா நேற்று முன்தினம் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடைபெற்ற 'பக்தநந்தனர்' நாடகத்துக்கு தலைமை வகித்துப் பேசுகையில் எடுத்துக் கூறினர்.

வெள்ளவத்தை சைவமங்கையர் கழகத்தினுல் மேற்படி கல்லூரி நிதி உதவிக்காக இந்நாடகம் நடத்தப்பட்டது.

திரு. அபயசேகரா மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

பக்தநந்தனர் நாடகத்துக்கும் இப்போது நிலவி வரும் பிரச்னைக்கும் தொடர்பு இருக்கிறது. காலவேகத்தில் மாற்றம் ஏற்பட்டே தீரும்.

சைவமங்கையர் கழகம் பற்றிக் குறிப்பிட்டு அவர் பேசுகையில், இந்துக் கலாச்சாரத்தைப் பேணி வரும் ஒரு சிறந்த தனிப்பட்ட கல்வி ஸ்தாபனமாக இயங்கி கழகம் பெரும் பணியாற்றி வருகிறது என்றும் இவ்விதசேவை தொடரவேண்டுமென்று தாம் விரும்புவதாகவும் கூறினர்.

சைவ மங்கையர்க்கழகத்தின் முன்னுள் அதிபர் செல்வி சாசிப்பிள்ளை பேசுகையில் கூறியதாவது:

பழையனவற்றை நீக்கிப் புதிய நல்லவற்றை ஏற்றுக்கொள்ளும் பழக்கம் நம்மிடையே ஏற்பட்டுவிட்டால் பல பிரச்னைகளுக்குத் தீர்வு கண்டுவிடலாம்.

சமுதாயத்துக்குத் தேவையான பணியில் சைவமங்கையர்கழகம் ஈடுபட்டு வருகிறது. எத்தனையோ கஷ்டங்களுக்கு மத்தியில் இந்த சமய வளர்ச்சிக்கு கழகம் தன்னுலான தொண்டாற்றி வருகிறது. இளம் உள்ளங்களில் நல்லவற்றை விதைத்துவிட்டால் அவர்கள் வளரும்போது சமுதாயத்தில் தேவையான மாற்றம் ஏற்பட்டுவிடும்.

தமிழ் மக்களுக்கு சைவமும் தமிழும் இரு கண்கள். இதனைப் போற்றிப் பேணி வளர்ப்பது தமிழரது தலையாய கடமை. நம்மிடையே இப்போதிருக்கும் பல வேற்றுமைகளற்ருலே நாம் வளர்ச்சி பெறமுடியும்.

## மீண்டும் தலை காட்டுகிறது

சுழிபுரம், செவ்.

கட்டுப்படுத்தப்பட்ட மலேரியா நோய் மீண்டும் தலைகாட்ட முற்பட்டுள்ளது. அரசாங்கமும் சுகாதாரப் பகுதியினரும் மலேரியா நோயை விரட்டி விட முடியாது. பொதுமக்கள் மிக்க கவனமாக ஒன்றுபட்டு உழைத்தாலே நோயைத் தடுக்கலாம்.''

இவ்வாறு சுழிபுரம் கிழக்கு அமெரிக்கன் மிஷன் பாடசாலை மாணவர் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட சுகாதாரவாரக் கொண்டாட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய பாடசாலையின் தலைமை ஆசிரியர் திரு. வே. சரவணமுத்து குறிப்பிட்டார். செல்வன் செ. அமிர்தலிங்கம் உட்பட மற்றும் பலர் பேசினர்.

## 'ஐரோப்பிய அனுபவம்'

புன்னாலைக்கட்டுவன், செவ்வாய்

கடந்த ஆறுமாதங்களாக இத்தாலி சுவிற்சர்லாந்து, பிரான்ஸ், இங்கிலாந்து ஆகிய நாடுகளில் இலங்கைப்பிரதிநிதியாகச் சென்ற வர்த்தகத்திணைக்கள உபதிகாரிகளில் ஒருவரான திரு. சி. வே. கமலநாதன் அண்மையில் இலங்கை திரும்பியுள்ளார்.

கரவெட்டியைச் சேர்ந்த திரு கமலநாதன் தனது ஐரோப்பிய அனுபவங்களைப் பற்றி இலங்கை வானொலியில் தொடர்ச்சியாக உரை நிகழ்த்தவிருக்கிறார்.

## விஞத்தாள் குழப்பம்

புன்னாலைக்கட்டுவன், செவ்வாய்

அண்மையில் நடந்த பரீட்சைகளொன்றுக்கான கணக்கியல் விஞத்தாளில் ஆங்கில மொழி பெயர்ப்புகள் மாணவரின் மூளையைக் குழப்பக்கூடிய தரமைந்துள்ளன என்றும், மொழித்திணைக்களம் வெளியிட்டுள்ள தமிழ்க் கலைச்சொல்லகராதியில் காணப்படும் மொழிபெயர்ப்புப் பதங்களுக்காக வேறு பதங்கள் உபயோகிக்கப்பட்டுள்ளன என்றும் அகில இலங்கை வர்த்தகக் கல்விச் சங்கம் பரீட்சையாணையாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

செலவு வரவு என்பதற்கு பற்றுவரவு எனக்குறிப்பிடப்பட்டுள்ளதும் ஆணையாளர் தவறை ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

## 'தமிழிலும் வேண்டும்'

புன்னாலைக்கட்டுவன், செவ்வாய்

தமிழ்மொழிமூலம் வர்த்தகக் கல்வி பல்கலைக்கழகத்தில் போதிக்கப்படல் வேண்டும் என அகில இலங்கை வர்த்தகக்கலைமன்றத் தூதுகோஷ்டியொன்று மிகவிரைவில் உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரத்தின் தலைமையில் கல்வி அமைச்சரைப் பேட்டிகாணவிருக்கிறது.

இப்பொழுது சிங்களம் மூலமே வர்த்தகப்பாடங்கள் பல்கலைக்கழகத்தில் போதிக்கப்படுவதாக அறியப்பட்டுள்ளது.

சில அரசாங்க திணைக்களங்கள்

# உணவுற்பத்தி இயக்கத்திற்கு மறைமுக எதிர்ப்பாம்

மல்லாவி, செவ்வாய்

''துணுக்காய்ப் பிரிவில் உள்ள வவுனிக்குளக் குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு பத்து வருடங்கள் பூர்த்தியாகியும் இன்றுவரை வவுனிக்குள நீர்ப்பாசனத் திணைக்களம் வாய்க்கால் வேலைகளைப் பூர்த்தி செய்து கொடுக்கவில்லை. உணவு உற்பத்தியைப் பெருக்குங்கள் என்று மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்படும் அதே நேரத்தில் சில பொறுப்புள்ள அரசாங்க திணைக்களங்கள் உணவு உற்பத்தி இயக்கத்தில் ஈடுபடும் விவசாயிகளுக்கும் உணவுற்பத்தி இயக்கத்திற்கும் மறைமுகமாக எதிராக வேலை செய்வது வேடிக்கையானது. இப்பகுதி விவசாயிகளின் கஷ்டங்களை நேரடியாகப் பார்வையிடுவதற்கு வெகு விரைவில் பிரதமரை இப்பகுதிக்கு அழைக்குமாறு தங்களை வேண்டிக்கொள்கின்றேம்.''

இவ்வாறு துணுக்காய்ப் பிரிவுக் காரியாதிகாரி பிரிவில் உள்ள கிராமமுன்னேற்றச் சங்கங்களின் சமாசச் செயலாளர் திரு. கு. சிவஞானசண்முகம் வவுனிக்குள நீர்ப்பாசனத் திட்டக் குறைபாடுகள் பற்றி கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினத்திற்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## இடமாற்றங்கள்

உடுப்பிட்டி, செவ்.

கரணவாய் தெற்கு சோனங்கன் மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிய பண்டிதர் திரு க. வேலுப்பிள்ளை உடுப்பிட்டி மகளிர் கல்லூரிக்கும் திரு. ஏ. அலோசியஸ் வதிரி தேவரையாளி இந்துக்கல்லூரிக்கும், திரு ச கிருஷ்ணபிள்ளை கப்பூது இந்துக்கலவன் பாடசாலைக்கும், கனிஷ்ட அதிபர் திரு. கு. செல்லையா கெருடாவில் இந்து தமிழ்க்கலவன் பாடசாலைக்கும், ஆங்கில ஆசிரியர் திரு. க. சி. குலசிங்கம் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்திற்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு வித்தியாலய ஆசிரியர்களாலும் மாணவர்களாலும், பிரிவுபசாரம் அளிக்கப்பட்டது.

## சற்பிரசாத சுற்றுப்பிரகாரம்

புன்னாலைக்கட்டுவன், செவ்.

பருத்தித்துறை அர்ச். தேவமாதா ஆலயத்தில் நேற்று முன்தினம் கட்டளைக் குரு வண- எஸ். தேவராசா தலைமையில் சற்பிரசாதச் சுற்றுப் பிரகாரம் நடந்தது. இதில் வடபகுதியிலுள்ள பிறகுருமாரும் சகோதரிகளும் பல பக்தர்களும் கலந்து கொண்டனர்.

## இருதயநாதர் பெருநாள்

புன்னாலைக்கட்டுவன், செவ்.

இருதயநாதர் பெருநாள் அண்மையில் வதிரி திரு இருதயக்கல்லூரி ஆசிரிய, மாணவரால் கொண்டாடப்பட்டது அர்ச். அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்ற விசேஷ ஆராதனையின்பின் கட்டளைக் குரு. வண. எஸ். தேவராசா ஆசீர்வதித்தார்.

## வேண்டுகோள்

சுழிபுரம், செவ்.

வலிகாமம் மேற்கு கயரோக நிவாரண தேசிய சங்கத்தினர் பொது மக்களிடமிருந்து நிதிஉதவி அளிக்குமாறு ஒரு கோரிக்கையை விடுத்துள்ளனர். கயரோகிகளுக்கும் சங்க வளர்ச்சிக்கும் பயன் படுத்த வேண்டிய நிதிகளை வழங்கும்படி வேண்டியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

கொட்டடி, ஆஸ்பத்திரி வீதியில் தெரு ஓரமாக 2 பரப்பு நிலம் உடனே விற்பனைக்குண்டு. ஆர். ஏ. நல்லையா, பேரின்பநாயகம் ஒழுங்கை, சுண்டிக்குளி. 1387

### காணவில்லை

சின்னச்செட்டிக்குளம் கிழக்கு கிராமச்சபை உப. பற்றுச்சீட்டு தொ. இல 2. கொண்ட றிசீட் புஸ்தகம் 30-5-68ல் 2-30 யாழ்தேவியில் யாழ்ப்பாணம் புகைபிரதநிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 1386

### வைத்தியம்

தொய்வு, வாதம், இரந்தி, கெற்பரோகம், சொறி, சிரங்கு மற்றும் சகலவித சர்ம ரோகங்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும். டாக்டர் செல்வி சிவா. வேலாயுதம், 67, பிரதானவீதி, யாழ்ப்பாணம். 1573

### உபநயனவிஞ்ஞாபனம்

27-6-68 வியாழன் காலை 6மணி முதல் 8மணி வரையுமுள்ள சுபமுகூர்த்தத்தில் எமது குமாரர்கள் ஸ்ரீகாந்தசர்மா, ஜெயரஞ்ஜசர்மா, உமாகாந்தசர்மா ஆகியோருக்கு உபநயனம் நிகழும். உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம், சோ. நடராஜ ஐயர், ஆசிரியர், கோண்டாவில் மேற்கு, கோண்டாவில். 1572

## வடமராட்சியில் விளையாட்டுவிழா

புலோலி, செவ்.

வடமராட்சி சனசமூக நிலையங்களின் சமாஜத்தில் அங்கம்வகிக்கும் நிலையங்களின் உறுப்பினர் மாத்திரம் பங்குபற்றக்கூடிய விளையாட்டுவிழா அடுத்த மாதம் நடுப்பகுதியில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம் விளையாட்டு மைதானத்தில், வடமராட்சிக் காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன் தலைமையில் நடைபெறுமென்றும் இவ்விழாவில் இடம்பெறும் விளையாட்டுகளில் வெற்றிபெறும் வீரர்களுக்கு வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்குவாரெனவும் தெரிகிறது.

25 மைல் சைக்கிள் ஓட்டம், ஐந்து மைல் மரதன் ஓட்டம் கயிறு இழுவை போட்டி, விநோத உடைப் போட்டி போன்ற விளையாட்டுகள் விழாவில் இடம் பெறவிருக்கின்றன.

## யாழ். கோஷ்டியும் பங்குபற்றும்

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை உதைபந்தாட்ட சங்கம் நடத்தும் மாகாணலீக் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் யாழ்ப்பாணத் தெரிவுக் கோஷ்டியும் பங்குபற்றவிருக்கிறது.

யாழ்ப்பாணத் தெரிவுக் கோஷ்டியைத் தெரிவு செய்வதில் யாழ்ப்பாண உதைபந்தாட்டச் சங்க காரியதரிசி துரித நடவடிக்கை எடுத்துள்ளார்.

உதைபந்தாட்டக் கழகங்களுக்கிடையிலும்லீக்சுற்றுப் போட்டி நடைபெறவிருக்கிறது.

## ஏழாலை மகாவித்தியாலய விளையாட்டுப்போட்டி

குரும்பசிட்டி, செவ்.

மூன்று இல்லங்களிடையே நடைபெற்ற ஏழாலை மகா வித்தியாலய வருடாந்த விளையாட்டுப் போட்டியில் 223 புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட சிவப்புஇல்லம் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது. மஞ்சள் இல்லம், நீல இல்லம் ஆகியன முறையே 197, 169 புள்ளிகளை சுவீகரித்துக்கொண்டன. வடமாநில கல்வி ஆலோசகர் திரு. ஆர். திருநாவுக்கரசு இப்போட்டியின் பிரதமவிருந்தினராகக்கலந்து கொண்டு வெற்றியீட்டியோருக்கு பரிசில்கள் வழங்கினார். கல்லூரிஅதிபர் திரு. எஸ். அம்பலவாணர் சபைக்கு தலைமை வகித்தார்.

## அல்வாயூர் ஸ்ரீலங்கா விளையாட்டுப்போட்டி

யாழ்ப்பாணம், புதன்

அல்வாயூர் ஸ்ரீலங்கா வித்தியாசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டியைப் பருத்தித்துறைக் கல்வியதிகாரி திரு. வெ. கந்தசாமி கொடியேற்றி ஆரம்பித்து வைத்தார்.

பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம் தலைமை வகித்து விளையாட்டு நிகழ்ச்சிகளைப் பாராட்டிப் பேசினார். பருத்தித்துறை, உடுப்பிட்டி விளையாட்டுப் பகுதி உத்தியோகத்தர்கள் திருவாளர்கள் க. கார்த்திகேசு.சு. சிற்றம்பலம், தம்பி ஆகியோர்கள் விளையாட்டுக்களை ஆரம்பித்து நடத்தி வைத்தார்கள்.

நடை பெற்ற விளையாட்டுகளில் முதலிடத்தைப் பெற்றுத் தம்பையா (சிவப்பு) இல்லம் டாக்டர் சு. வேலும் மயிலும் ஜே. பி. யின் பெற்றோர் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்தை இம்முறையும் சுவீகரித்துக் கொண்டது. இரண்டாவது பெரியதம்பி (பச்சை) இல்லமும், மூன்றாவது கந்தப்பு (மஞ்சள்) இல்லமும் பெற்றுக் கொண்டன.


4வது வாரம்!

ராஜா

(யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-30

பேசாதினங்களில் 4 காட்சி

ஜெய்சங்கர்-கே.ஆர். விஜயா நடிக்கும்

முகூர்த்த நாள்



ராணி

(யாழ்ப்பாணம்)

ஜெய்சங்கர் விஜயலட்சுமி நடித்த

பவானி



வின்ஸர்

முத்துராமன் உதயசந்திரிகா நடித்த

ராஜாத்தி



REGAL JAFFNA

Daily at 4-45, 7-00 & 9-45 P. M.

Richard Johnson & Elke Sommer in

DEADLIER THAN THE MALE

(Adults Only)

no passes & no concession


## யாழ். கிறீன்பீல் உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டி ஆரம்பம்

### யாழ்.றேஞ்சஸ், புனிதவளன்வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் 'கிறீன் பீல்' விளையாட்டுக் கழகத்தின் 10-வது வருடாந்த விழாவைமுன்னிட்டு, நடாத்தப்பட்டு வரும் உதைபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டி விளையாட்டரங்கில் ஆரம்பமானது.

முதல் போட்டியில் "யாழ் றேஞ்சஸ்" விளையாட்டுக்கழகமும், 'கிறீன்பீல்' விளையாட்டுக்கழக 'பி' பிரிவுக் கோஷ்டியும் மோதின. போட்டி முடிவில் 'யாழ் றேஞ்சஸ்' கோஷ்டி கிறீன்பீல் 'பி' கோஷ்டியை 2—0 கோல்களால் தோற்கடித்தது. யாழ். றேஞ்சஸ் சார்பில் இரு கோல்களையும் திரு. கணேஷன் போட்டார். இப்போட்டிக்கு திரு. தேவதாஸ் மத்தியஸ்தம் வகித்தார்.

இரண்டாவது போட்டியில் 'புனிதவளன்' விளையாட்டுக்கோஷ்டியும், தெல்லிப்பழை 'குரூஸ்கோப்பல்' விளையாட்டுக் கோஷ்டியும் மோதின. ஆரம்பத்திலிருந்து முடியும்வரை புனிதவளன் கோஷ்டிமிகத்திறமையாக விளையாடி முடிவில், குரூஸ்கோப்பல்கோஷ்டியை 3—1 கோல்களால் தோற்கடித்தது. புனிதவளன் கோஷ்டி முன்னணி வீரர்களாகிய யோகரத்தினம். றிச்சேட் முறையே 2,1 கோல்களைப்போட்டனர். இப்போட்டிக்கு திரு. இராசேந்திரம் மத்தியஸ்தம் வகித்தார். [ந. நி.]

## மென்பந்து கிரிக்கெட்

### பரந்தன் ரசாயன தொழிற்சாலை

# வீரர்கள் வெற்றி

யாழ்ப்பாணம், புதன்

கிளிநொச்சி விளையாட்டுச் சங்கத்தினரால் நடாத்தப்பட்டுவரும் 'மென்பந்து' போட்டியில், பரந்தன் ரசாயனத்தொழிற்சாலைக் கோஷ்டியும், கிளிநொச்சி நீர்ப்பாசன இலாகாக் கோஷ்டியும் போட்டியிட்டன. முதலில் துடுப்பெடுத்தாடிய நீர்ப்பாசன இலாகா முதல் இன்னிங்ஸில் மொத்தம் 18 ஓட்டங்களையும், இரண்டாவதுஇன்னிங்ஸில் மொத்தம் 14 ஓட்டங்களையும் பெற்றது. இதில் திரு. பென்னடிற் முதல் இன்னிங்ஸில் 8 விக்கெட்டுகளையும், இரண்டாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்.

ரசாயன தொழிற்சாலைக் கோஷ்டி தனது முதல் இன்னிங்ஸில் மொத்தம் 156 ஓட்டங்களைப் பெற்று ஓர் புதிய சாதனையை நிலைநாட்டியது. இதில் திரு. சண்முகலிங்கம் 50 ஓட்டங்களையும், திரு. பென்னடிற் 49 ஓட்டங்களையும் பெற்றார். இக்கோஷ்டி நீர்ப்பாசன இலாகாக்கோஷ்டியை இன்னிங்ஸ் வித்தியாசத்தால் தோற்கடித்தது.

ஃ ஃ ஃ

பரந்தன் ரசாயனத் தொழிற்சாலைக் கோஷ்டிக்கும், ஆரோக்கியம் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற மென்பந்துப் போட்டியில், ஆரோக்கியம் விளையாட்டுக் கழகம் இரண்டு இன்னிங்ஸிலும் முறையே 57. 25 ஓட்டங்களைப் பெற்றது. ரசாயன தொழிற்சாலைக் கோஷ்டி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 50 ஓட்டங்களையும். இரண்டாவது இன்னிங்ஸில் மூன்று விக்கெட் நஷ்டத்துக்கு 36 ஓட்டங்களையும் பெற்று, ஆரோக்கியம் விளையாட்டுக்கழகத்தை 7 விக்கெட்டுகளால் தோற்கடித்தது. [ந. நி.]

## தேர்தலில் போட்டியிடும்

உடுப்பிட்டி செவ்.

இலங்கைத் திராவிடமுன்னேற்றக்கழகம் அடுத்த பொதுதேர்தலில் குதிக்கும் எனத்தெரிய வருகிறது. இதற்கான ஒழுங்குகளையும் பிரச்சாரக் கூட்டங்களையும் கழகம் ஒவ்வொரு தொகுதிகளிலும் நடாத்திவருகின்றது.

## தற்கொலை

குரும்பசிட்டி, செவ்.

உடுவில் தெற்கைச் சேர்ந்த கே. பரமலிங்கம் என்பவர் நச்சுத்திராவகம் அருந்திசென்றசனிக்கிழமை தற்கொலை செய்துகொண்டார். திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. தர்மலிங்கம் இவரது மரணம்பற்றி விசாரணை நடாத்தி தற்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

## உற்சவம்

யாழ்ப்பாணம், புதன்

வதிரி பூவற்கரைப்பிள்ளையார் ஆலய 9ம் நாள் உற்சவம் சென்ற ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

## ஸ்பேஸ் வென்றது

புன்னாலைக்கட்டுவன் செவ்

இமையாணன் விளையாட்டு கழக ஆதரவில் நடத்தப்படும் கைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக் கழகம், புத்தூர் சுடரொளிக் கழகத்தை 2—1 விளையாட்டுக்களால் தோற்கடித்தது.

திரு. எஸ். இந்திரன் மத்தியஸ்தம் வகித்தார்.


MANOHARA JAFFNA

Daily at 4-45, 7-00 & 9-45 P. m.

John Wayne in

ELDORADO

Color


## ஏவுகணைத் தாக்குதல்

### அமெரிக்காவின் பாதுகாப்பு அரண்

வாஷிங்டன், ஜூன் 25

கண்டத்துக்குக் கண்டம் பாயும் ஏவுகணைத் தாக்குதலை எதிர்த்துப் பாதுகாப்பு அரண்ஒன்றை அமைக்கும் திட்டத்தை அமெரிக்க காங்கிரஸ்சபை அங்கீகரித்துள்ளது.

சீனாவிடமிருந்து வரக்கூடிய தாக்குதலுக்கு எதிராகவே, இத்திட்டம் பிரதானமாக உருவாக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்மூலம், ஓர் ஏவுகணைத் தாக்குதலின் போது, 25 கோடி அமெரிக்கர்களின் உயிர் காக்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.


கிங்ஸ்லி பிளாசா வைலன்


வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) | ராஜ் (நீர்கொழும்பு)

ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) | விஜிதா (ஹட்டன்) | அயன் (மன்னார்)

★ ஜெமினி கணேசன்

★ கே. ஆர். விஜயா

நடித்த



ஏ. வி. எம். புரொடக்ஷன்ஸ்

ராமு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரலிங்கம் கருத்துக்கள் பற்றி அதிர்ச்சி

யாழ்ப்பாணம், செவ்.

சிறுபான்மைத்தமிழர் ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக ஈழத் தமிழர் ஐக்கிய முன்னணியின் தலைவரும் முன்னாள் வவுனியா எம். பி. யுமான திரு. ஸி. சுந்தரலிங்கம் விடுத்துள்ள கருத்துக்களைப்பற்றி தாம் பெரிதும் அதிர்ச்சியடைந்திருப்பதாக சிறுபான்மை ஐக்கிய முன்னணியின் இணைச்செயலாளர்கள் திரு. நல்லையாவும் திரு. எம். ஸி. சுப்பிரமணியமும் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்திருக்கிறார்கள்.

அவர்கள் விடுத்துள்ள அறிக்கையின் விபரம் வருமாறு:-

சைவ அனுட்டான பாதுகாப்புச்சபையினருக்கு உதவியாக யாழ் மாவட்ட அதிபரையும் பொலிஸ்அதிபரையும் கண்டு சிறுபான்மைத் தமிழர் சைவ ஆலயங்களுக்குள் பிரவேசிக்கப்படாதென்றும், அப்படி அவர்கள் பிரவேசிப்பதற்குப் பாதுகாப்பளிக்கப்படாதென்றும் வலியுறுத்தியதையிட்டு நாம் மிகவும் வேதனைப்படுகின்றோம். ஆற்றலிலும் அனுபவத்திலும்மிகுந்தஒருசைவப் பெரியாரும், ஈழத்தமிழர்களின் தலைவருமான திரு. ஸி. சுந்தரலிங்கம்இப்படி நடந்துகொண்டதையிட்டு நாம் அதிர்ச்சியுற்றோம். சிறுபான்மைத்தமிழரின் ஆலயப்பிரவேசத்தையிட்டு ஈழத்தமிழர் ஐக்கிய முன்னணி நிறுவனத்தின் கருத்தும் இதுதானா என்று அறியநாம்மிகவும் ஆசைப்படுகின்றோம்.

அரசாங்க அதிபரும், பொலிஸ் அதிபரும் பல தருணங்களில் எம்மைப் பொறுத்திருக்கும்படிசொன்னார்கள். எம். பிக்களில் பலரின் எதிர்ப்புக்கு மத்தியிலும் பொறுத்திருந்தோம். ஆனி 30-ம் திகதியே கடைசித் தவணை யென்றும் மாவட்டஅதிபரும்பொலிஸ் அதிபரும் சொன்ன உறுதி வாக்கை முழுமையாய்நம்பியிருந்தோம். ஒரு மிகச்சிறு பகுதியினரின் எதிர்ப்புக்காக இந்தப் புண்ணியமும் நீதியுமான கைங்கரியத்தை இப்பகுதி பெருந் தலைவர்களும் உண்மையான சைவப் பெரியார்களும் நடத்திவைப்பார்களென்பதே எங்கள் நம்பிக்கை. எந்தவகையிலாயினும் சிறுபான்மைத் தமிழர் இந்நாட்டில் தன்மானத்துடன் வாழ்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பது சிறுபான்மைத் தமிழ் ஐக்கிய முன்னணியின் தவிர்க்கமுடியாத கடமையாகிவிட்டது.

# விவசாயப்படையில் சேர தயங்குவதேன்?

## தமிழ் இளைஞர்களிடம் எஸ். ஜே வி. கேட்கிறார்

அலவெட்டி, திங்கள் "தமிழ் வாலிபர்களே விவசாயப் படையில் சேரமுன்வாருங்கள்" என்று வேண்டுகோள் விடுத்துள்ளார் திரு. எஸ். ஜே வி. செல்வநாயகம்.

நாட்டின்சுய தேவையைப் பூர்த்தி செய்யவும் இளைஞர்கள் மத்தியில் நிலவிவரும் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவும் ஆரம்பிக்கப்பட்ட விவசாயப் படை முகாமில் சேர வாலிபர்கள் தயங்குவதேன்'

தமிழ் பகுதிகளில் அரசாங்கத்தால் நிறுவப்பட்டுள்ள விவசாயப்படை முகாங்களில் வீரத் தமிழ் வாலிபர்கள் சேரா விட்டால் அவ்விடங்களை சிங்கள வாலிபர்களைக் கொண்டு நிரப்பிய பின் நாம் என்ன செய்வது என்றுயோசித்துப்பாருங்கள்

வடமாகாணத்தில் நிறுவப்பட்டுள்ள விசுவமடு, முத்தையன்கட்டு விவசாயப் படைகளில் தேவையானவர்கள் சேரவில்லை. இன்னும் காங்கேசன்துறைத் தொகுதிக்கு பல பேருக்கு இடமுண்டு. ஆகவே தமிழ் இளைஞர் சமுதாயமே உடன் விவசாயப்படையில் சேர்ந்து நாட்டை முன்னேற்ற மடைச் செய்யுங்கள்.

இவ்வாறு காங்கேசன்துறை எம் பி யும் தமிழரசுக் கட்சித் தலைவருமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

## கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த முயற்சி

சுழிபுரம், திங்:

மூளாய் பகுதியில் கட்டாக்காலி ஆடு மாடுகளின் தொல்லையால் தோட்டச் செய்கையாளர் பெரும் நஷ்டத்துக்குள்ளாகியுள்ளனர். கட்டாக்காலி கால் நடைகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்த மூளாய் பயிர்ச் செய்கைக் குழுவினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

## பஞ்சமர்கள்......

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

என்னும் வழமைஎதிர்மறை நிலையிலுள்ளது. அதாவது இடையிடையே எழுந்த ஓர் உரிமை மறுப்பேஒழிய தொடர்ந்தேர்ச்சியாகவுள்ள சாதனையின் பாற்பட்டதன்று. அதையொரு வழமையென்றே சொல்ல முடியாது. அதுவுமில்லாது பிரவேசத்தை தடைபண்ணும் அநாகரிகச்செயல் எமது சமூகத்திலுள்ள ஒரு பெரும் பகுதியினரைப் பாதிக்கிறது. இத்தகைய செயல் சட்டமாகக் கணிக்கப்படும் தகுதியையுடையதன்று.

ஒரு சமயத்திலுள்ளவர்கள் தாம் வழிபடும் இடத்துக்குப் பஞ்சமர்கள் பிரவேசிப்பதைத் தடைசெய்யப்படாது என்று தான் சமூகக் குறைபாடுகள் தடுப்புச் சட்டத்தின் 3-ம் ஷரத்துக் கூறுகிறது. குறித்த இச்சட்டம் உன்னதமான நோக்கைக் கொண்டுள்ளது. மனித சமத்துவத்தையே அது நிறுவுகிறது. அது சட்டத்துக்கும், மனச்சாட்சிக்கும், நீதிக்கும் விரோதமற்றது. இதை அமுல்செய்து பஞ்சமர்களையும் இறைவழிபாடுசெய்ய சமூகம் முயற்சிக்கவேண்டும்.

சி. பொன்னையா
(அட்வகேட்)

அகிலஇலங்கை இந்து மாமன்ற ஆலயப்பிர வேசக்குழுக் காரியதரிசி.

# இன்று மானிப்பாய் கி. ச. தேர்தல்

மானிப்பாய் கிராமசபைக்கான புதிய அங்கத்தவர் தெரிவு இன்று நடைபெறுகின்றது. இன்று காலை 9 மணிக்கு வாக்குப் பதிவு ஆரம்பமாகி மாலை 3மணியுடன் முடிவடையும்.

# தியேட்டர் வசதிகள்பற்றி

## மீண்டும் வற்புறுத்தல்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்திலுள்ள தியேட்டர்களின் சுகாதார வசதிகளையும் இடவசதிகளையும் ஏற்படுத்த தியேட்டர் பரிபாலகர்களுக்கு யாழ். மாநகரசபை விசேஷ ஆணையாளர் திரு. எஸ். முருகவேளினால் மீண்டும் இரண்டு மாத அவகாசம் அளிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான மகாநாடொன்று அண்மையில் திரு. முருகவேள் தலைமையில் நடைபெற்றது இம் மகாநாட்டில் தியேட்டர் உரிமையாளர்கள் வைத்திய அதிகாரி டாக்டர் இராஜசூரியர். தலைமைக் காரியாலய பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. மாணிக்கம், மாநகரசபை பதில் ஆணையாளர் திரு. தங்கவேலு உட்பட இன்னும் பலர் சமுகம் கொடுத்திருந்தனர்.

தியேட்டர்களில் மாநகரசபை உத்தரவை மீறி புகை பிடிப்பவர்கள் மீது மாநகரசபை சட்டத்திற்கிணங்க நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்வதெனவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

இம்மகாநாட்டைத் தொடர்ந்து விஷேச ஆணையாளர் திரு. எஸ். முருகவேள் தியேட்டர் உரிமையாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபம் ஒன்றில் தியேட்டர்களில் கொழும்பில் தயாரிக்கப்படும் இரண்டு ரகசோடாக்கள் மட்டும் விற்பனை செய்யப்படலாமென அவைகளின் பெயர்களைக் குறிப்பிட்டிருப்பது இங்கு பெரும் அதிருப்தியை உண்டுபண்ணியுள்ளதாகத் தெரிய வருகிறது.

[கா. நி.]

## நிரந்தர.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்டனர். அவர்களில் பலர் பதவி உயர்வும் பெற்றனர். இப்படியாகப் பதவியுயர்வு பெற்ற பலர் தக்கதருணத்தில் தீவிர நடவடிக்கை எடுத்துத் தலையிட்டு எமது பறிபோன உரிமையை மீட்டுத் தந்த சங்கத்திற்குநன்றியும் கடமைப்பாடும் உடையோம் எனஎழுதியுள்ளனர்.

இடமாற்றம் மட்டும் தான் எமது குறிக்கோள் அல்ல. ஆசிரியர்கள் தம் உரிமைகளைப் பெறவும், சுயமரியாதையுடன் தலைநிமிர்ந்து வாழவும் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என்பதற்காகவே அகில இலங்கை ஆசிரிய சங்கங்களின் ஆலோசனைச் சபையில் எமது சங்கமும் அங்கம் வகிக்கின்றது. 12 அம்சக் கோரிக்கைகள் பற்றியும் கல்வி மசோதாக்கள் கல்வி அமைச்சின் திட்டங்கள்பற்றியும் ஆலோசனைச்சபை அடிக்கடி ஏகோபித்து முடிவுகள் செய்து நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது. இதுவரையில் ஆலோசனைச் சபையில் எடுத்து ஆராயப்பட்ட விடயங்களில் ஆசிரிய சேவை சம்பந்தமாகக் கொண்டுவரப்பட்ட திட்டம் ஒன்றிலேயே நாம் கருத்து வேற்றுமையை உடையவராக இருந்தோம். ஆசிரிய சேவையை நிரந்தர [illegible] சேவை, அகில இலங்கைச் சேவை என வகுத்து ஆசிரியர்கள் இவற்றுள் ஒன்றில் சேரலாம் என அத்திட்டம் கூறுகிறது. ஆனால் அத்திட்டம் வெளிமாகாண ஆசிரியர்களைப் பாதிக்கும் எனக் கருதிய பொது நிர்வாகசபை அத்திட்டத்தை ஏற்க வேண்டாமெனத் தீர்மானித்தது.

யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரியில் முறையே 30,14,9 வருடங்கள் சேவை செய்த ஆசிரியர்களான திரு. சி. ஜே. இளையதம்பி, திரு. ஆர். பானுதேவன், திரு. பீ. கதிர்வேலாயுதபிள்ளை ஆகியோரைச் சேவையிலிருந்து நீக்க முகாமையாளர் எடுத்த முயற்சியையும் ஆலோசனைச்சபை எதிர்த்துள்ளது."

# இங்கு விடுமுறை வேறு நாட்களில்

இமையாணன், செவ்வாய்

பஸ் போக்குவரத்து இல்லாதமையால் வலை நெசவு ஆலையில் விடுமுறை நாட்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன போயா நாட்களுக்குப் பதிலாக வெள்ளிக்கிழமைகளில் முழு நாளும் வியாழக்கிழமைகளில் அரை நாளும் விடுமுறை நாட்களாக்கப்பட்டுள்ளன

வெள்ளிக்கிழமை நாட்களில் தொண்டமானாறு செல்வச் சந்நிதி கோவிலை முன்னிட்டு அநேகமான பஸ்கள் இந்நெசவாலைச் கூடாகச் செல்லாமல் தொண்டமானாற்றிற் கூடாகவே சேவையிலீடுபடுகின்றன இதனால் ஊழியர்களின் வசதியை முன்னிட்டு விடுமுறை நாட்கள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

## மணவாளக்கோல சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் கோட்டை முனீஸ்வரப்பெருமானுக்கு நாளைமுதல் 14 நாட்களுக்கு தினசரி மாலை 5 மணி முதல் 7 மணிவரை விசேட ஸ்பிஷேகமும் விசேட பூஜை ஆராதனைகளும் இரவு 7 மணி முதல் 10 மணிவரை சங்கீத கதாப்பிரசங்கங்களும் திருமுறை ஓதலும் நடைபெறஇருக்கின்றது. 15-ம்நாள் அஷ்டோத்தர சத சங்காபிஷேகம் இடம் பெறும்.

## ஐயாறன்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

ரசனைவரமுத்து, மேலைநாடுகளில் பிறந்திருந்தால், அல்லது இந்தியாவிலாவது பிறந்திருந்தால், அவரும் அவரது கோஷ்டியினரும் எவ்வளவோ மேன்மையுற்றிருப்பர்.

கோவில் திருப்பணிக்காக போக்குவரத்துச் செலவுக்கான தொகையை மட்டும் வாங்கிக் கொண்டு நடித்தனராம்' அவருக்கும் அவரது கலைக் கோஷ்டியினருக்கும் அந்த முருகன் அருளால் எல்லா நலன்களும் கிடைக்க கலைப் பிரியர்களனைவரும் வாழ்த்தி அவருக்குப் பூரண ஆதரவு அளிப்பர். அப்பேர்ப்பட்ட நடிகர் இங்கு இருப்பது யாழ்ப்பாணத்துக்கே பெருமையாகும்.

ஃ ஃ ஃ

எழுவாயிறுவாயிலாதன
வெங்கட்பிணி தவிர்த்து
வழுவா மருத்துவ மாவன
மாநரகக் குழிவாய்
விழுவாரவர் தம்மை
விழ்ப்பன மீட்பன
மிக்க வன்போடு
அழுவார்க்கமுதங்கள்
காண்க ஐயாறன்
அடித்தலமே.

—அப்பர்மூர்த்திகள்.

[ஐயாறன் அடித்தலம் ஆதி அந்தம் இல்லாதன. கொடும்பிணி தவிர்த்து, வழுவாத மருத்துவமாவன. மா நரகக்குழிவாய் விழுவாரை விழுப்பன. விழுந்தவரையும் விழுமுன் கழுவாய் செய்துகொண்டவரையும் அந்நரகினின்று மீட்பன. மிக்க அன்போடு உளமுருகி அழுவோருக்கு அமுதங்கள் ஆதலைக் காண்க]

# பல்கலைக்கழக...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கொண்டிருக்கக்கூடாது.

பாடசாலைகளுக்கு அரசாங்க உதவி கிடைப்பது கஷ்டமாகிக்கொண்டு வருகிறது. இதனை நன்கு உணர்ந்து பெற்றோர் பொதுமக்கள் பாடசாலைகளின் வளர்ச்சிக்குதவ முன்வரவேண்டும்.

கல்லூரிபற்றிக் குறிப்பிட்டு அமைச்சர் பேசுகையில்கிராமப்புறத்தில்அமைந்துள்ள மகாஜனக்கல்லூரி இலங்கையிலேயே முதன்மையான கல்லூரியாக விளங்குகின்றது பெருமைப்படத்தக்கது எனவும் ஸ்தாபகரான திரு. தெரையப்பாபிள்ளையின் தொண்டுமறக்கமுடியாதது என்றும் குறிப்பிட்டார்.

திரு எம் வைரமுத்து ஜெ பி ஸ்தாபகர் நினைவு உரை நிகழ்த்தினர், விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு திருமதி எம் திருச்செல்வம் பரிசுகளை வழங்கினார். செல்வி கோகிலாதேவி சிவசுப்பிரமணியம் வரவேற்புரை நிகழ்த்தினர். திரு அ. இரத்தினம் நன்றி கூறினர். விழா இறுதியில் மாணவரின் இசை, நாட்டிய, நாடகநிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

(அள. குரு. நிருபர்கள்)

## பரீட்சை......

1-ம் பக்கத் தொடர்ச்சி

பரீட்சைக்கு அமரமுடியும் என்றும்அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாம் தடவையாக வெளி மாணாக்கராக இறுதிப் பரீட்சைக்குத் தோற்றும் அனைவரும் தாம் எழுதும் முதல் போதனை இனத்திற்கு 20 ரூபாவும் மேற்கொண்டு எழுதும் சகல போதனையினங்களுக்கும் தலா 10 ரூபாவும் விண்ணப்பப் பணமாக அறவிடப்படும்

ஏனைய பரீட்சைகளுக்கு விண்ணப்பிப்பது போல பரீட்சார்த்திகள் உரிய பணத்தொகைகளை முத்திரைகள் மூலம் விண்ணப்பப்பத்திரத்துடன் தாம் பயிற்சி பெற்ற தொழில் நுட்ப நிலைய அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்

பரீட்சார்த்திகள் எந்த தொழில் நுட்ப நிலையத்தில் பயிற்சி பெற்று இறுதித் தேர்வுகளுக்கு அமர்ந்தார்களோ அதே தொழில் நுட்ப நிலைய வெளிமாணாக்கராகவே அவர்கள் கருதப்படுவர் ஒரு நிலையத்தில் பயிற்சி பெற்று வேறொரு நிலையத்தின் வெளி மாணாக்கராக அமர அனுமதிக்கப்படமாட்டார்

இந்த வருடம் ஆகஸ்ட்-செப்டம்பரில் நடைபெற இருக்கும் இறுதிப் பரீட்சைகளுக்கு இரண்டாம் முறையாக வெளிமாணாக்கராக பரீட்சை எழுதுபவர்கள இந்நடவடிக்கைகளுக்கு கட்டுப்பட்டு தமது விண்ணப்பப்பத்திரத்தை இம்மாதம் 30-ந் திகதிக்குள தாம் பயிற்சி பெற்ற தொழில் நுட்பநிலைய அதிபர்களுக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

## டாக்டர்கள் நியமனம்

அனலைதீவு, செவ்.

சிலாபம் அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் டாக்டர் கார்த்திகேசு பழனிவேல் நயினாதீவு அரசினர் ஆஸ்பத்திரிக்கு மாவட்ட வைத்திய அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். டாக்டர் சண்முகநாதன் கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால யாழ்ப்பாணம் ஸ்ரீ கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org